செய்தி வெளியீடு எண். 150 நாள்: 17.03.2018

## மீட்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு ரூ.22.20 இலட்சம் தமிழ்நாடு அரசு சிறப்பு திட்டத்தின்படி வழங்கப்பட்டது

கடந்த (15.03.2018) அன்று திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், பாண்டேஷ்வரம் பகுதியில் தனியார் செங்கற்சூளையில் 147 நபர்கள் கொத்தடிமைகளாக பணிபுரிந்தவர்களை வருவாய் அலுவலர்கள் மூலம் மீட்கப்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு நாட்களாக இவர்கள் அனைவருக்கும் உணவு, பால், குடிநீர் போன்ற அனைத்து வசதிகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் வழங்கப்பட்டு வந்தன. இன்று (17.03.2018) மேற்பட்ட நபர்களை தங்கள் சொந்த பகுதியான ராய்ப்பூர் மாவட்டத்திற்கு அனுப்ப மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டு 111 நபர்களுக்கு தலா ரூ.20 ஆயிரம் வீதம் ரூ.22.20 இலட்சம் இவர்களது வங்கி கணக்கில் வழங்கப்பட்டது. இவர்கள் இரயில் மூலம் அவரவர் பகுதிக்குச் செல்வதற்கு நான்கு காவல்துறை அதிகாரிகளும், இரண்டு வருவாய்த்துறை அலுவலர்களும், தொழிலாளர் நலத்துறை சார்பாக ஒருவரும் ராய்ப்பூர் மாவட்டம் வரை அழைத்துச் சென்று அந்த மாவட்ட தொழிலாளர் நிர்வாகத்திடம் ஒப்படைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**